Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    மார்கழி 11    (26-12-1992)    சனிக்கிழமை    ஓசை 312

## கிளி. ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரி இல்லை

கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமையாற்ற தகுதிவாய்ந்த வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்றும்; இதனால் இம்மாவட்ட நோயாளர்கள் பலத்தசிரமத்தை எதிர்நோக்கிவருவதாகவும் கூறப்படுகிறது. மேலும் இந்த மாவட்டத்தில் இயங்கும் ஒரே ஆதார வைத்தியசாலையான கிளிநொச்சி வைத்தியசாலையில் போதுமான மருந்துப் பொருள்களும் இல்லை எனவும் தெரியவருகிறது. அத்துடன் இவ் வைத்தியசாலையில் இயங்கும் நோயாளர்நலன்புரிச் சங்கத்திற்கும். வைத்தியசாலை நிர்வாகத்திற்திற்குமிடையே சுமுகமான உறவு இன்மையாலும் மக்கள் பெரிதும்பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது, (16)

# கிறிஸ்மஸ் புனித நாளில் விமானப்படை அனர்த்தம்

## ஆசிரியர் கல்லூரி பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 2 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இதற்குரிய வினாத்தாள்கள் விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு குமணகப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டன.

இப் பரீட்சைக்கான நேர அட்டவணைகளை சம்பந்தப்பட்ட அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப் பரீட்சைகள் இரண்டு முறைகள் பின்போடப்பட்டமையால் பல பரீட்சார்த்திகள் குழப்பமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சில வெளி மாவட்ட மாணவர்கள் போக்குவரத்துக் கஷ்ரங்களினால் பல சிரமங்களின் மத்தியில் பரீட்சைக்கு தோற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது

## 88 படை அதிகாரிகள் மீது லஞ்சக் குற்றச் சாட்டுகள்

(கொழும்பு)

எண்பத்தெட்டு இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இலஞ்சத்திணைக்களத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 1991 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இவர்கள் ஈட்டிய சொத்து விபரங்கள் பற்றியே விசாரிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் இந்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், மொத்தம் 72 பொலிஸ் அதிகாரிகளும், 16 இராணுவ அதிகாரிகளும் இவ்வாறு விசாரிக்கப்படுவதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவப் பொலிஸ் அதிகாரிகளைத் தவிரப் பெரும்பாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த 14 அரசியல வாதிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஸ்தாபனங்களைச் சேர்ந்த தலைவர்கள் 29 பேர், 45 நிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளாலி கடற்பரப்பில் புலிகள் படையினர் மோதல்

[யாழ்ப்பாணம்]

இளாலிகடற்பரப்பில்நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன கடற்படையினர் இடையிடையே பீரங்கித் தாக்குதல்களை நடாத்தியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில படகுச் சேவைகள் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

## வீரவணக்கம்



ஜேமிஸ் ராஜபக்ஸ்ஸ

துணைப்படை வீரர் ஒருவர் சுகயீனம் காரணமாக நேற்று சாவடைந்தார். சாவடைந்த ஜேமிஸ் ராஜபக்ஸ்ஸ (முள்ளிவாய்க்கால் மேற்கு, முல்லைத்தீவு) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## அரியாலையில் ஒருவர் பலி: 16பேர் காயம்

[யாழ்ப்பாணம்]

அரியாலையில் நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த மக்களின் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய அரக்கத்தனமான குண்டுவீச்சினால் ஒரு பெண்மணி கொல்லப்பட்டார். 16 பேர் காயமடைந்தனர். பல வீடுகள் நாசமாகின.

நண்பகல் 12-10 மணியளவில் நத்தார்பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது இம்மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் பதினாறிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர், அத்துடன் பத்து வீடுகள் சேதமடைந்தன. அதில் இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

நேற்று நண்பகல் வேளை அரியாலைப் பகுதியை சுற்றி வட்டமிட்ட மேற்படி விமானங்கள் பொன்னம்பலம் வீதி, முள்ளி வீதி ஆகிய பகுதிகளை நோக்கி இரு தடவைகளில் நான்கு குண்டுகளை அடுத்தடுத்து வீசின. இக்குண்டுகள் வீழ்ந்து வெடித்ததினால் நத்தார் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த திருமதி பிரிஸ்கா சாந்தியாம் பிள்ளை (50 வயது) என்கின்ற பெண்மணி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் ஆறு மாதக் குழந்தை உட்பட பதினாறு பேர் காயமடைந்தனர். இதில் எட்டிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு

பிறேமா, (38), தில்லை அம்பாள் [55], முத்துக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பங்கருக்குள் செல்லும்முன்பே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன

### மயிரிழையில் உயிர் தப்பியவர் தகவல்

[யாழ்ப்பாணம்]

உணவு அருந்தத் தயாராகிக்கொண்டிருந்த வேளை திடீரென குண்டுவீச்சு விமானங்களின் சத்தம் கேட்டதும் பதுங்கு குழிக்குள் ஓடுமுன் பாரிய சத்தத்துடன் ஒரே தடவையில் இரண்டு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இவ்வாறு நேற்று அரியாலைப் பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய மூர்க்கத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களின் போது உயிர் தப்பியவர்கள் மிகவும் கலகலப்பாகக் காணப்பட்டனர். சிறுவர்கள், பெரியவர்கள் என வயது வேறுபாடின்றி அனைவரும் உறவினர் வீடுகளுக்கு சென்று வந்துகொண்டிருந்தனர். மதிய உணவுகள் தயாராகிக் கொண்டிருந்தவேளை திடீரென வான்பரப்பில் குண்டு வீச்சு விமானங்களின் சத்தம் கேட்டதும் வீட்டாரையும் அழைத்துக்கொண்டு பாதுகாப்பு இடத்தை நோக்கி ஓடுமுன்னே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இவை மிக அருகில் இருந்த வீட்டில் வீழ்ந்ததால் சிதறல்கள் எனது வீட்டிலும் வந்து வீழ்ந்தன.

சில நிமிடங்களில் அழுகுரல்கள் கேட்டன. பாரிய குழிகள் காணப்பட்டன அப்பகுதிகள் ஒரே புகைமண்டலமாகவும் காணப்பட்டன. வீதிகள், மரங்கள் சேதமடைந்தன புற்கள் கூட கருகிக் காணப்படுகின்றன என்றார்.

## மணலாற்றில் பலியான படையினர் 42 ஆக உயர்வு; 20 பேர் படுகாயம்

டுத்தப்பட்டுள்ளதாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளாலி கடற்பரப்பில் புலிகள் படையினர் மோதல்

[யாழ்ப்பாணம்]

இளாலிகடற்பரப்பில்நேற்று முன் தினம் இரவு சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற் புலிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடை பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன கடற்படையினர் இடையி டையே பீரங்கித் தாக்குதல் களை நடாத்தியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை மட்டுப்படுத் தப்பட்ட அளவில் சில படகுச் சேவைகள் நடைபெற்றதாக வும் தெரியவருகிறது.

### ஜேமிஸ் ராஜபக்ஸ்ஸ

துணைப்படை வீரர் ஒருவர் சுகயீனம் காரணமாக நேற்று சாவடைந்தார். சாவடைந்த ஜேமிஸ் ராஜபக்ஸ்ஸ (முள்ளி வாய்க்கால் மேற்கு, முல்லைத் தீவு) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக்கொள்கின் றனர்.

டது. இதில் ஒருவர் ஸ்தலத் திலேயே கொல்லப்பட்டார் பதினாறிற்கும் மேற்பட்ட வர்கள் காயமடைந்தனர், அத்துடன் பத்து வீடுகள் சேதமடைந்தன. அதில் இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

நேற்று நண்பகல் வேளை அரியாலைப் பகுதியை சுற்றி வட்டமிட்ட மேற்படி விமா னங்கள் பொன்னம்பலம் வீதி, முள்ளி வீதி ஆகிய பகுதிகளை நோக்கி இரு தடவைகளில்

# பங்கருக்குள் செல்லும்முன்பே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன

## பயிரிலையில் உயிர் தப்பியவர் தகவல்

[யாழ்ப்பாணம்]

உணவு அருந்தத் தயாரா கிக்கொண்டிருந்த வேளை திடீரென குண்டுவீச்சு விமா னங்களின் சத்தம் கேட்டதும் பதுங்கு குழிக்குள் ஓடுமுன் பாரிய சத்தத்துடன் ஒரே தடவையில் இரண்டு குண்டு கள் வீழ்ந்து வெடித்தன.

இவ்வாறு நேற்று அரியா லைப் பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய மூர்க்கத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களி லிருந்து பயிரிலையில் உயிர் தப்பிய ஜெயக்குமார் என்ப வர் நமது நிருபரிடம் தெரி வித்தார். இச்சம்பவம் பற்றி அவர் மேலும் விபரிக்கையில் நேற்று நத்தார் பண்டிகையா தலால் இப்பகுதி கிறிஸ்த்த வர்கள் மிகவும் கலகலப்பாகக் காணப்பட்டனர். சிறுவர்கள், பெரியவர்கள் என வயது வேறுபாடின்றி அனைவரும் உறவினர் வீடுகளுக்கு சென்று வந்துகொண்டிருந்தனர். மதிய உணவுகள் தயாராகிக் கொண்டிருந்தவேளை திடீ ரென வான்பரப்பில் குண்டு வீச்சு விமானங்களின் சத்தம் கேட்டதும் வீட்டாரையும் அழைத்துக்கொண்டு பாது காப்பு இடத்தை நோக்கி ஓடுமுன்னே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இவை மிக அரு கில் இருந்த வீட்டில் வீழ்ந்த தால் சிதறல்கள் எனது வீட் டிலும் வந்து வீழ்ந்தன.

சில நிமிடங்களில் அழு குரல்கள் கேட்டன. பாரிய குழிகள் காணப்பட்டன அப் பகுதிகள் ஒரே புகைமண்டல மாகவும் காணப்பட்டன. வீதிகள், மரங்கள் சேதமடை ந்தன புற்கள் கூட கருகி காணப்படுகின்றன என்றார்.

# மணலாற்றில் பலியான படையினர் 42 ஆக உயர்வு; 20 பேர் படுகாயம்

[மணலாறு]

மணலாற்றில் நேற்று முன் தினம் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடு தலைப் புலிகள் நடாத்திய அதிரடித்தாக்குதலில் இரண்டு அதிகாரிகள் உட்பட 42 இரா ணுவத்தினர் கொல்லப்பட்ட டனர் இருபது பேர் படுகாய மடைந்ததாகவும், மேலும் பலர் சிறுகாயங்களுக்குள்ளா கியதாகவும் சிறிலங்கா பாது காப்பு வட்டாரங்களை மேற் கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மாலை 4 45 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது ஒரு உழவு இயந்திர மும் பெருந்தொகையான ஆயு தங்களும் இவர்களிடமிருந்து விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் இரா ணுவ முகாமிலிருந்தும் அம் முகாமிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள கோட்டைக் கேணி இராணுவ முகாமிலி ருந்து ரோந்து வந்துகொண்டி ருந்த 80 க்கும் மேற்பட்டோ ரைக் கொண்ட இராணுவ அணியினரே புலிகளால் வழி மறித்துத் தாக்கப்பட்டனர்.

இத் தாக்குதல் நடைபெற் றுக் கொண்டிருந்த போது இவ் இரு முகாம்களிலிருந்தும் மோட்டார் தாக்குதல்களை நடத்தியவாறு வெளியே வந்த இராணுவத்தினர் மீதும் விடு தலைப் புலிகளின் மற்றுமோர் அணி தாக்குதல்களை மேற் கொண்டது இம்மோதல்கள் சுமார் 35 நிமிட நேரம் இடம் பெற்றன.

இதேவேளை சிங்களக் குடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 6 வேங்கைகள் வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாய் இரா ணுவ முகாமிலிருந்தும் கோட் டைக்கேணி இராணுவமுகாமி லிருந்தும் வெளியேறி ரோந்தி லீடுபட்ட சிறீலங்காஇராணுவ படைகள் மீது விடுதலைப்புலி கள் நேற்று முன்தினம் மேற் கொண்ட அதிரடித்தாக்குத லின் போது ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

★ முல்லைத்தீவுக் கோட்டச் சிறப்புப் பொறுப்பாளர் மேஜர் செங்கோலன் செங் கோல (பொன்னுத்துரை பால முருகேஷ் சங்கத்தார் வயல், இயக்கச்சி.)

★ கப்டன் கில்கி (ருக்மணி தாமோதரம் 2-ம் வாய்க்கால், கிளிநொச்சி)

★ கப்டன் சுரேந்திரன் (ஆனந்தசாமி ஆனந்தராஜ் அன்புவழிபுரம், திருமலை.)

★ லெப்டினன்ட் அமுதன் (சடையன் தர்மலிங்கம் 4-ம் கண்டம், பன்குளம்.]

★ லெப்டினன்ட் மருதன் வித்திரா [மாணிக்கபோடி அருட்சிவம் முனைக்காடு, கொக்கட்டிச்சோலை]

★ லெப்டினன்ட் இளங்கோ (உலகசேகரம் [உமாக்குலேந்தி ரன் ஏறாவூர் 4-ம் குறிச்சி ஐயங்கேணி மட்டக்களப்பு)

ஆகிய போராளிகளே வீரச் சாவடைந்தவர்களாவர் வீரச் சாவடைந்த இவ் வேங்கைகளு க்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித் துக் கொள்கின்றனர்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடு வாய், கோட்டைக்கேணி இராணுவ முகாம் களிலிருந்து வெளியேறி ரோந்து சென்ற சிறி லங்கா இராணுவ அணிகள் மீது நேற்று முன் தினம் மாலை விடுதலைப் புலிகள் மேற்கொ ண்ட அதிரடித் தாக்குதலின் போது ஒரு உழவு இயந்திரமும் பெருந்தொகையான ஆயு தங்களும் கைப்பற்றப்பட்டன. சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலி களால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விப ரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி | — 03 |
| ★ | 203 பிஸ்டல் | — 01 |
| ★ | ரி 56-2 ரகத் துப்பாக்கி | — 22 |
| ★ | ரி 56-1 ரக துப்பாக்கி | — 03 |
| ★ | ரி 56 புதிய மொடல் | — 09 |
| ★ | ரி 81-1 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | ஏ.கே.எல்.எம் ஜிரம் மகசீன் | — 03 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி லிங் | — 1514 |
| ★ | 203 எறிகணைகள் | — 10 |
| ★ | ரி 56 மகசீன் | — 117 |
| ★ | ரி 81 மகசீன் | — 04 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 5557 |
| ★ | ஜே. ஆர். ரக கைக்குண்டு | — 14 |
| ★ | எம். 75 ரக குண்டு | — 08 |
| ★ | ரி 81 றைபிள் கிரனைட் | — 08 |
| ★ | 25 குதிரைச் சக்தி வெளி இணைப்பு இயந்திரம் | — 01 |
| ★ | தொலைத்தொடர்புசாதனம் | — 02 |
| ★ | உழவு இயந்திரம் | — 01 |
| ★ | கிட்பாக் | — 04 |
| ★ | ஏ. கே. கோல்சர் | — 32 |
| ★ | கெல்மட் | — 10 |
| ★ | புளட்புறு ஜக்கட் | — 01 |
| ★ | இராணுவ சப்பாத்து (சோடி) | — 08 |

## யாழ். குடாவை வலம்வந்த சுப்பர்சொனிக் விமானம்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா விமானப்படைக் குச் சொந்தமான இரண்டு சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை 8. 45 மணியளவில் யாழ். குடாநாட்டின் பல பகுதி களையும் பேரிரைச்சலுடன் வட்டமிட்டுச் சென்றன.

திடீரென யாழ் குடா நாட்டின் வான்பரப்பில் தோன்றிய இவ்விரண்டு விமா னங்களினால் நத்தார் ஆராத னைக்குச் சென்றுகொண்டிரு ந்த மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இவற்றை அவதானித்த மக்கள் வீதிகளிலும் பொது இடங் களிலும் வீடுகளுக்கு வெளி யாகவும் நின்று வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்த இரு விமானங்களும் குறைந்த வேகத்தில் குடா நாட்டைச் சுற்றி வலம்வந்து மறைந்ததைத் தொடர்ந்து நிலைமை வழமைக்குத் திரும் பியது. [யா], [21]

## மண்ணெய் லொறிகள் வந்தன

(வவுனியா)

நீண்ட நாட்களின் பின்னர் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகா மைத் தாண்டி மண்எண்ணை வந்தது.

கடந்த 22 ஆம் திகதி சர்வ தேச செஞ்சிலுவைச் சங்க வாகனங்களிலும், 23 ஆம் திகதி வேறு மூன்றுலொறிகளி லும் மண்எண்ணை வந்தது.

இவை தவிர, கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத் தின் அனுமதியைப் பெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பறநட்டகல்லில் விமானத் தாக்குதல்

வவுனியா பறநட்டகல்லை அண்டிய பகுதியில் சிறிலங்கா அரசின் குண்டு வீச்சு விமா னங்கள் ரொக்கட் மோட்டர் தாக்குதலை மேற்கொண்டன. மக்கள் நெருக்கமாக நின்றி ருந்த கடைப் பகுதியை நோக்கி இத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்ட போதிலும் எவரும் பாதிப்படையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இருபொம்மர்களும், உலங்கு வானூர்தி ஒன்றும் இத் தாக் குதலில் ஈடுபட்டன.

கடந்த 23 ஆம் திகதி மாலை விமானத் தாக்குதலை அடுத்து உலங்குவானூர்தியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதன் பொழுது அவ்விடத்தில் தரித் திருந்த சில லொறிகளின் கண்ணாடிகள் சேதமாகின.

# அங்கிளிக்கன் கொழும்பு ஆயர் ஜன. 8 இல் யாழ். வருகிறார்

## புலிகளுடன் பேச்சு நடத்துவார்

(கொழும்பு)

இலங்கை திருச்சபை (அங்கி ளிக்கன்) கொழும்பு மறை மாவட்டத்தின் பேராயர் அதி வண. கெனத் மைக்கல் பெர் னாண்டோ யாழ்ப்பாணத்து க்கு வருகை தரவுள்ளார்.

வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் பேராயர் ஜனவரி 13 ஆம் திகதி வரை யாழ்ப்பா ணத்தில்தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது

தனது யாழ் விஜயத்தின் போது பேராயர் கெனத் பெர் னாண்டோ, இராணுவத் தாக்குதல்களால் யாழ் குடா நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவு களையும் மக்களின் துன்பங் களையும் நேரில் கண்டறிய வுள்ளார்.

பேராயர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் இனப்பிரச்சினை குறித்து விடு தலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவார் என

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமா அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா விரைவில் அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்து கொள்ள இருப்பதாக நம்பகர மான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இந்த அமைச்சரவை மாற்ற ங்கள் பெரும்பாலும் ஜனவரி 2-ம் திகதி கண்டியில் நடை பெறும். நான்காவது ஆண்டு நிறைவுக்குப் பின்னர் இடம் பெறலாமெனவும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இளைய ரத்தத்தைப் பாய்ச்சும் ஒரு முயற்சியாக இளைஞர்கள்பலர் ராஜாங்க அமைச்சுப் பொறுப் புகளுக்கு நியமிக்கப்படலா மெனவும், அமைச்சர்கள் எவ ரும் அமைச்சரவையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என் றாலும், அமைச்சுப் பொறுப்பு களில் மாற்றம் வருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது

இதேவேளை அமைச்சர் களின் பணி குறித்து பிரேம தாசா தீவிரமான மறுபரிசீல னையில் இறங்கி இருப்பதாக வும் கூறப்படுகிறது.

## வரி விளம்பரம்

### பற் சிகிச்சை நிலையம்

சென்றல் கிளினிக் எஸ். பி. சாமி அன் கோ கட்டிட பின்புறம், யாழ். பஸ் நிலையம் அருகில், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் பா. நே. தினசரி: 12.00 ந. ப.-2 00 பி. ப வரை (3240)

### நீமோல்

நீமோல் என்றால் சுகாதாரம் - மலசல கூடத்தை "நீமோல்" கொண்டு சுத்தி கரியுங்கள். தொற்றுநோய்க் கிருமிகளிலிருந்து பாதுகாக்கிறது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது.
- மில்க்வைற்"
(5633)

### தவறிவிட்டது

ஸ்டெதஸ்கோப் STETHES-COPE) முக்கிய சாவிகள், கடிதங்கள் அடங்கிய கைப்பை 21-12-92 ல் கச்சேரி நல்லூர் வீதியில்மூத்தவிநாயகர் கோயிலுக்குச் சமீபமாகதவறி விட்டது.கண்டெடுத்தவர்கள்தயவு செய்துடாக்டர் சி. கந்தசாமி, வெளிநோயாளர் பிரிவு. யாழ். போதனாவைத்தியசாலை என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (3857)

### ENGLISH GRAMMAR

English Grammar For G A.Q And Deeree (ESL by Kandasamy கிழமையில் 2 நாட்கள் 87 திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில் (3861)

### ஜாம் வெற்றுப் போத்தல்கள் தேவை

ஜாம் வெற்றுப் போத்தல்கள் மூடியுடன் 5/- படி பெற்றுக்கொள்ளப்படும் வேலவன் ஸ்ரோர்ஸ், நல்லூர் கோயில் முன்பாக (3863)


### தட்டுப்பாடு

[வடமராட்சி]

அத்தியடியில் இயங்கும் பருத்தித்துறை கிராமிய வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

நோயாளிகள் அத்தியாவசிய மருந்துகளை வெளியிலே பணம் செலுத்தி பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


## MATHS CENTRE
NELLIADY

★ ஆண்டு - 05
புலமைப் பரிசில் வகுப்புக்கள்
ஆரம்பம்: 26.12.92 சனி
(3410) A. M. 9.00


## தொண்டமானாறு நீரேரியில் தொழில் செய்வதில் நிபந்தனை

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 23-02-1980 இல் நடைபெற்ற வல்லை நன்னீர் தொடுவாய் கண்டிகட்டல் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக,

1) வல்லைத் தொடுவாயில் போடப்பட்ட கண்டிகள் அப்படியே இருக்கும் ஆனால், இரண்டு கண்டிக்கு மிடையே உள்ள கைமீன் கூடுகள் ஒவ்வொருநாளும் 1.00 மணிமுதல் பின்னேரம் 5 00 மணிவரை மட்டும் அகற்றப்பட்டு கடற்பிராணிகள் பாயும் தண்ணீருடன் போய்க்கொண்டிருக்க வகை செய்ய வேண்டும்.

2) ஒருவரும் வல்லை பாலத்தடியில் படுக்கை வலை போடக்கூடாது.

19-02-1992இல் எடுக்கப்பட்ட படுப்புவலை,இழுப்பு வலை தொடர்பான பிணக்குகள் தொடர்பாக வடமராட்சி வடக்கு ஒன்றியத்தில் தற்காலிகமாக போர்க்கால சூழ்நிலையை முன்னிட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக,

01) ஐப்பசி 01-ம் திகதிமுதல் தை 31-ம் திகதிவரை படுப்புவலை இழுப்புவலை ஆகிய இருவகைத் தொழில்களும்தொண்டமானாறு தொடக்கம் முள்ளிவரையும்உள்ள பகுதிகளில் செய்யக்கூடாது.மாசி 01 முதல் புரட்டாதி 30 வரை இவ்விரு தொழில்களும் செய்யலாம்.

02) தண்ணீர் பாய்ச்சலை மறிதது கண்டி கட்டுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொழில் செய்யும் சகலரும்;

மேலே சொல்லப்பட்ட விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுக்குமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் ஒன்றியச் செயலாளர் திரு த சுந்தரலிங்கமும், கடற்றொழில் பரிசோதகர் திரு. ந. கணேசமூர்த்தியும் கூட்டாக வேண்டிக் கொள்கிறார்கள். இது தொடர்பாக ஏதாவது தொடர்பு கொள்ள விரும்பின் வடமராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

(சி/5657)


## நங்கூரம்

சமூக அறிவியல் ஏடு
மாதாந்த சஞ்சிகை
விலை ரூபா 15
உங்கள் அபிமான

## G-A-Q-94

பேராதனை பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

B. A Part I, B. Com Part I

யாழ் பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகளும் ஆரம்பமாகி விட்டன.

விபரங்களுக்கு:

S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-5649)


## நாய்களை வளர்ப்போருக்கான அன்பான வேண்டுகோள்

01. உங்கள் உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதிப் பத்திரம் பெற்று நாய்களை வளர்த்தல் வேண்டும்.

02. நாய்களை வீட்டிலேயே வளர்த்தல் வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்கள் நாய்களை வீதிக்குச் செல்லவிடாதீர்கள். வீதியிற் காணப்படும் நாய்களைக் கட்டாக்காலி நாய்களாகக் கருதி அவை உள்ளூராட்சி மன்றத்தினால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும்.

03. உங்கள் நாய்களுக்குத் தவறாமல் விசர் நோய்த் தடுப்பூசி போடுவித்துக் கொள்ளுங்கள்.

04. தேவையற்ற நாய்களை அழித்தல் தொடர்பாக உங்கள் உள்ளூராட்சி மன்றத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

05. இவ்வேண்டுகோள்களைக் கடைப்பிடித்து விலைமதிப்பற்ற மனித உயிர்களின் அனாவசிய இழப்புக்களைத் தடுப்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்.
92. 12. 21. (சி-5652)

### யாழ்ப்பாணம் பல நோ. கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## அங்கத்தவர் கவனத்திற்கு

அன்புடையீர்,

உங்கள் பங்குப் பணம் ரூபா 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது 05 03-1993 ஆம் ஆண்டிற்கு முன்னர் பங்குப்பணத்தை செலுத்தாவிடின் ப. நோ. கூ. சங்கத்தின் அங்கத்துவ உரிமையை இழந்து விடுவீர்கள்.

❁ தவறவிடாதீர்கள்
❁ இன்றே விரையுங்கள்
❁ நன்றே செய்யுங்கள்

விபரங்களுக்கு:-

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

"நாம் மற்றவர்களுக்காகவும்

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட கமநலசேவை நிலையங்களில் தற்போது இருப்பில் உள்ள பின்வரும் பசளைகள். கீழ்க் குறிப்பிடப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றன இப்பசளை வகைகளைப் பிறஸ்தாபனங்களுக்கு மொத்தமாக விற்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


எனவே 05-01- 1993 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் உங்களது எதிர்காலத் தேவைக்கான பசளைகளை உடனடியாகக் கமநலசேவை நிலையங்களில் பெற்றுக் கொண்டு, ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுமபடி அறிவிக்கப்படுகிறீர்கள்,

| பசளை இனம் | விலை (50கிலோ கொண்ட பொதி) |
|---|---|
| 1. அமோனியம் சல்பேற் | ரூபா 490/- |
| 2. ரி. எஸ். பி | ,, 710/- |
| 3. எம். ஒ. பி | ,, 632/- |

கமநலசேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்
1992-12-25
[சி-5655]

ஆ. சிவசுவாமி
சிரேஷ்ட கமநலசேவை உதவி ஆணையாளர்
யாழ்ப்பாண மாவட்டம்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் இன்தூர்

(கணநாதர் - குணநாதன்)

(இந்திய இராணுவத்துடனான மோதலில் காரைநகரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்)

தாயின் மடியில் தாயக அரவணைப்பில்

### ஜாம் வெற்றுப் போத்தல்கள் தேவை

ஜாம் வெற்றுப் போத்தல்கள் மூடியுடன் 5/- படி பெற்றுக்கொள்ளப்படும் வேலவன் ஸ்ரோர்ஸ், நல்லூர் கோயில் முன்பாக (3863)

### தட்டுப்பாடு

[வட மராட்சி]

அத்தியடியில் இயங்கும் பருத்தித்துறை கிராமிய வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

நோயாளிகள் அத்தியாவசிய மருந்துகளை வெளியிலே பணம் செலுத்தி பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### பட்டிமன்றம்

கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயக விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 28-12-92 திங்கட்கிழமை கல்வயல் இந்து இளைஞர் மன்றத்தினரால் 'நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுவதில் பெரிதும் விஞ்சி நிற்பது இராமாயணமா? மகாபாரதமா?' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடாத்தப்பட உள்ளது. இதன் நடுவராகக் "சோப்பாய் சிவம்" அவர்கள் விளங்குவார்கள்.

### திருமணப் பதிவுகள்

(வேலணை)

தீவகத்தில் சட்டப்படி திருமணம் செய்யாமல் பல வருடங்களாக இருந்து வந்தவர்களுக்கான திருமணப் பதிவு வைபவமொன்று சென்ற 19ம் திகதி சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தின் காரியாலயத்தில் நடாத்தப்பட்டது இந்தத் திருமணப் பதிவு வைபவத்தில் 350க்கு மேற்பட்ட சோடிகள் தங்களது சட்டப்படியான திருமணப் பதிவுகளைச் செய்துள்ளனர். (14)

### சுயதொழிற் பயிற்சி

வேலணை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இளம் பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி ஒன்றை வழங்கும் நோக்குடன் சிறு கைத்தொழில் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வேலணை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அனுசரணையுடன், மகளிர் அபிவிருத்தி நிலையம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (88)

---

# நங்கூரம்

## சமூக அறிவியல் ஏடு

மாதாந்த சஞ்சிகை

விலை ரூபா 15

உங்கள் அபிமான

## நங்கூரம்

இனி
உங்கள் வாசலுக்கு வரும்

**31-12-92 இற்கு முன்னர் சந்தாதாரராகுங்கள்**



உங்கள் குழந்தைகளின்
அறிவுப்பசிக்கெனவும் நாளொன்றுக்கு
50 சதம் ஒதுக்கிடுங்கள்!

நிர்வாக ஆசிரியர்
அரசடி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம் (சி-5656

---

யாழ்ப்பாணம்
பல நோ. கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## அங்கத்தவர் கவனத்திற்கு

அன்புடையீர்,

உங்கள் பங்குப் பணம் ரூபா 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது 05 03-1993 ஆம் ஆண்டிற்கு முன்னர் பங்குப்பணத்தை செலுத்தாவிடின் ப. நோ. கூ. சங்கத்தின் அங்கத்துவ உரிமையை இழந்து விடுவீர்கள்.

❀ தவறவிடாதீர்கள்
❀ இன்றே விரையுங்கள்
❀ நன்றே செய்யுங்கள்

விபரங்களுக்கு:-

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

''நாம் மற்றவர்களுக்காகவும்
மற்றவர்கள் நமக்காகவும்''

சொலமன் சூ. சிறில்
தலைவர்

பு. நவரட்ணம்,
செயலாளர்

(சி-5654)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### செல்வி சிவப்பிரகாசம் சிவமலர்

மலர்வு : 02 - 02 - 1971
உதிர்வு : 26 - 01 - 1990

எங்கள் சிவமலராய்
இதயத்தில் தாமரையாய்
நெஞ்சம் நிறைந்திருந்த தாரகையே
ஓ எல். எடுத்தாய் உணர்வுகளில்
கலையானாய்
பாசம் தொடுத்தாய் பழக நல்லவித்தானாய்
நண்பிகளை நேசித்தாய் நற்பண்பு கொண்டிருந்தாய்
இன்றோ – பூவெனநீ காயாமல்
காலனடி சென்றுவிட்டாய் கனியாக
கலங்குகின்றோம் நாமிங்கு கண்ணீரில் நித்தம்

செல்வமே உன் ஆன்மா சாந்தியுற
எமது பிரார்த்தனைகள்

கா. சிவப்பிரகாசம்
7ஆம் வட்டாரம்,
மண்டை தீவு.

துயர்படும்
தாய், தந்தை,
சகோதரர்கள்
[சி-5600)

---



### கப்டன் இன்தூர்

(கணநாதர் - குணநாதன்)

(இந்திய இராணுவத்துடனான மோதலில் காரைநகரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்)

தாயின் மடியில்
3. 2. 1965

தாயக அரவணைப்பில்
26. 12. 1988

மண்மீட்க மூண்ட பெரும் போரைக்
கண்போலக் காத்திடவே - எண்ணி
களைத்தாய் இந்தியக் கூலிப்படைகளையே - அதனால்
நிலைத்தாய் வரலாற்றில் நீ

குமரபதி,
வட்டுமேற்கு (சிவன்கோவிலடி)
வட்டுக்கோட்டை.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்

(3843)

---

## நினைவு கூருகின்றோம்

### 1992-12-26

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ விஜயன் (ஜோசப் இமானுவேல் - சம்மாந்துறை - அம்பாறை)
★ இராசா (ரெட்ணம் அல்போன்ஸ் - அம்பாறை)
★ பீலிக்ஸ் [சுபாஜி பீலிக்ஸ் டயஸ் - அம்பாறை]

1986ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப்பகுதியில் அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

மில்டன் [வந்தாறுமூலை - மட்டக்களப்பு]
சரத் [வந்தாறுமூலை - மட்டக்களப்பு]

1987ஆம் ஆண்டு இந்தியப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொலைப்பட்ட 3- தமிழ்க்கடற்றொழிலாளர்கள்.

1990ஆம் ஆண்டு ஓமந்தைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ரமணன் [யோசப் ஜெயரத்தினம் - புளியம் பொக்கணை - கிளிநொச்சி]

அம்பாறை - சவளக்கடை முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரால் மட்டக்களப்பு - மண்டூர்ப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட வெல்லாவெளி, விவேகானந்தபுரம் வாசிகள் இருவர் உட்பட 4-தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5640)

## சிந்தனைக்கு

நமக்கான நண்பர்களை நாம் தேடிக் கொள்கின்றோம். ஆனால், எமது அயலவர்களை ஆண்டவன்தான் தேடித் தருகிறான்.

— யாரோ

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 26- 12- 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண் - 05

# மதவாதிகளிடம் தமிழகம்?

"திராவிட இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி" தமிழகத்தில் மதக் கலவரங்கள் ஏற்படுவதற்குரிய சூழ்நிலை உருவாகி வருவதுபோல் தெரிகின்றது. நரசிம்மராவின் மத்திய அரசிற்கு எதிரான நடவடிக்கைகள் என்ற ரீதியில் தமிழக முதலமைச்சர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இதனையே வெளிக்காட்டுவதாகவுள்ளன.

இந்திய மத்திய அரசிற்கும் அதிலும் குறிப்பாக இந்திரா காங்கிரஸ்கட்சி மத்தியில் ஆட்சியில்இருக்கும்போது வேறு கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் நிகழ்வதும், மாநில அரசுகள் கலைக்கப்படுவதும் வழமையானதொரு நடவடிக்கையேயாகும். இது தமிழ் நாட்டிற்கும் புதுமையானதொன்றல்ல. அறுபதுகளின் பிற்பகுதியில் திராவிடக்கட்சிகள் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்பு அவை தமது ஆட்சிக் காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தமை மிகவும் அரிதானதொன்றே.

இந்நிலையில், தற்பொழுது மத்தியிலுள்ள இந்திரா காங்கிரஸ் அரசிற்கும், தமிழகத்தில் உள்ள அ. தி. மு. க. அரசாங்கத்திற்கும் இடையில் மோதல்கள் உருவாவதொன்றும் புதுமையானதொன்றல்ல. ஆனால், இம்முறை மத்தியில் ஏற்படும் மோதலானதும், இதனால் தமிழகத்தில் ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடியும், தமிழகத்தின் எதிர்கால அரசியலை மதவாத வகுப்புவாத மோதல்களுக்கு இட்டுச் செல்லக் கூடியவையாக அமைந்துவிடக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

பிராமண வகுப்பைச் சேர்ந்த செல்வி ஜெயலலிதா திராவிட இயக்கத்தைச் சேர்ந்த ஓர் அரசியற் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றமை ஒரு வரலாற்றுப்பிறழ்வு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவ்வளர்ச்சியினை ஜெயலலிதா "திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி'' எனத் தெரிவித்தார். ஆனால், திராவிட இயக்கத்தின் இப்பரிணாம வளர்ச்சி தமிழகத்தையே ஒரு மத வாத மோதலுக்கு இட்டுச் செல்வதுதான் ஆபத்தான

—5—

# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

சீர்மாறன்

சத்துள்ள உணவும் போதியளவு உணவும் உயிரின வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாததென்பது கி. மு. 600ஆம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்த 'கார்க்க' (Caraka)முதல்கி.பின் கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஆங்கில வைத்தியத்தின் Western medicine) தந்தையெனக் கருதப்படும் ஹிப்போகிரேட்ஸ் (Hippocrates) வரை 'வளருகின்ற உடம்பிற்கு அதிகளவு உணவு தேவை' என்பதை தத்துவார்த்த ரீதியாக அறிவுறுத்தியிருந்த போதிலும் 1743-1794 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லவோஸியர் (Lavosier) என்பவரே சத்துணவைப் பற்றிய புதுயுகத்தைப் படைத்தவர் எனக்கருதப்படுகிறார். இவரே உடலிலுள்ள காபன், ஒட்ஸிஸனுடன் சேர்ந்து, உடலுக்குத் தேவையான வெப்பத்தை உண்டு பண்ணுகிறதென்பதையும், இது புறச்சூழ்நிலையிலுள்ள வெப்பதினளவு (Enviornmental Temperature) உடலுழைப்பு (Physical Activity) உணவு (Proximity to a meal) என்பவற்றில் தங்கியுள்ளது என்றும், விஞ்ஞான பூர்வமாக உடற்றொழிலியல் ஆராய்ச்சி மூலம் நிரூபித்தவர். மேலும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'மஜென்டீ' (Majendie 1783-1853) தான் மனித உடலின் ஆரோக்கியத்திற்கு புரதச்சத்து, சீனிச்சத்து, கொழுப்புச்சத்து மற்றும் கனியுப்புக்கள், விட்டமின்கள் என்பன தேவை என்பதை நிரூபித்தவர். ஒல்லாந்தைச் சேர்ந்த மல்டர் (mulder 1802-1880) 'புரதம்' தான் மிகவும் அடிப்படையானமூலப்பொருள் என்பதை வலிறுயுத்தினார். மேலும் லையிபிக் (Liebig) என்பவர் ஒரு மனிதனுக்குத் தேவையான புரதத்தினளவு அவனுடைய உடல் பருமனின் அளவிலும் (muscle mass) அவனுக்குத் தேவையான சீனிச்சத்தினளவும் கொழுப்புச்சத்தினளவும் அவனுடைய உடலுழைப்பிலும் (mechanical work) தங்கியுள்ளதென்பதை கண்டறிந்தார். ஒரு மனிதனுக்குத் தேவையான 'சக்தியினளவையும்' (Energy Reguir ements) ஒவ்வொரு உணவிலுமுள்ள சக்தியினளவையும் Energy Value of foods) அளவிடும் தொழிநுட்பத்தை கண்டறிந்தார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே வெவ்வேறு வேலைகளில் ஈடுபடும் மனிதனுக்குத் தேவையான புரதத்தினளவும் சக்தியினளவும் அதற்குத் தேவையான பாலுற்பத்தி முட்டையுற்பத்தியில்முறையே உடற்றொழியலாளர்களும் விவசாயிகளும் முயற்சியில் இறங்கினார்கள். அதேநேரம் 1871ஆம் ஆண்டுகளில் பாரிஸ் மாநகரம் முற்றுகையிடப்பட்டிருந்த போதே மனித வளர்ச்சிக்கு புரதச்சத்து சீனிச்சத்து கொழுப்புச்சத்து மாத்திரம் காணாது. வேறும் சில கனிப்பொருள்கள் தேவை என்பதை அவதானித்தார். அதனைத் தொடர்ந்து 1910 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஹொப்கின்ஸ் (Hopkins) இஜிக்மான் (Eijk man) ஜாவா நாட்டைச் சேர்ந்தவர். அவற்றிற்கு விற்றமின்கள் என பெயரிட்டார்கள்.

அத்துடன் உணவின் அளவை விட தரத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் 1940 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் உணவுப் பஞ்சமும் உணவுத் தடைகளும் ஏற்பட்ட போது மீண்டும் தனி மனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் தேவையான உணவின் அளவிலேயே கூடிய அக்கறை செலுத்தப்பட்டது. அத்துடன் உணவு பற்றாக்குறையினால் ஏற்பட்ட நெருக்கடியினால் முக்கியமான தொழிற்சாலைகளில் தொழில்புரிந்தவர்களுக்கும், படை வீரர்களுக்கும் தேவையான அளவு உணவு கொடுப்பதற்காக உணவுப் பொருள்களிலுள்ள சக்தியினளவும் தனிமனிதனுக்குத் தேவையான சக்தியினளவையும் கண்டுபிடிப்பதில் அதிகளவு ஆராய்ச்சியும் ஆர்வமும் காட்டப்பட்டது. இரண்டாம் உலகயுத்தம் முடிவடைந்ததும் ஏற்பட்ட திடீர் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடாக உணவு உற்பத்திபெருகவில்லை. இத்தகைய நெருக்கடியைச் சமாளிக்க மீண்டும் போஷாக்குவியலாளர்களும், ஏனையவர்களும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதோடு. ஒவ்வொரு உணவிலுமுள்ள போஷாக்குத் தன்மையையும் சக்தியினளவையும் கண்டறிவதில் மேலும் ஆராய்ச்சிகளையும் ஆர்வத்தையும் காட்டினர்.

### உணவு என்ன செய்கிறது?

உணவு அடிப்படையில் மூன்று பிரதான தொழில்களைச் செய்கின்றது.

1. உடலுக்குத் தேவையான சக்தியை உண்டாக்கப் பயன்படுகிறது.

2. உடலின் வளர்ச்சிக்காகவும் புதிய தசைநார்கள் வளரவும், காயங்களினாலும் நோய்களினாலும் ஏற்படும் இழப்புக்களை ஈடுசெய்யவும் பயன்படுகிறது.

3. உடல் தனக்குத் தேவையான நேரத்தில் சக்தியை உண்டாக்கவும், வளரவும் தேவையான மூலப்பொருள்களை வழங்குகிறது. மனிதனுக்குத் தேவையான அடிப்படை உணவுகளாக காபோவைதரேற்று. புரதம், கொழுப்பு, விட்டமின்கள், கனியுப்புக்கள் என்பன அடங்கும்.

காபோவைதரேற்று எனும் போது நாம் அன்றாடம் உண்ணும் சோறு, பிட்டு, இடியப்பம், பாண், தோசை, இட்டலி, சீனி போன்றவற்றிலிருந்து பெறப்படுகிறது. இதுவே உடலுக்குத் தேவையான அடிப்படைச் சக்தியை வழங்குகின்றது. கொழுப்புச்சத்து நாம் உண்ணும் இறைச்சிவகைகள், தேங்காய், தேங்காய் எண்ணெய் (சம்பல்)முட்டை, மாஜரீன், பட்டர் என்பவற்றிலுள்ளது. புரதச்சத்தானது இறைச்சி, மீன், கருவாடு, முட்டை, சோயா, பருப்பு வகைகள்என்பவற்றிலுள்ளது. விட்டமின்கள் எனப்படுவது இயற்கையாக காணப்படும் இரசாயன பொருள்களாகும் இவை மிகச்சிறிதளவே உடற் தொழிற்பாட்டுக்குப் போதுமானதாகும். ஆனால் மிக முக்கியமானவை ஒரு விலங்கிற்கு விட்டமினாக இருப்பது இன்னொரு விலங்கிற்கு விட்டமினாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இவற்றில் விட்டமின் A., விட்டமின்Bயில் தயமின் (B1-Thiamine) ரைபோபிளேவின் (B2-Riboflavin), பன்டோதினிக் அசிட் (B5 - Pantothenic Acid) , விட்டமின் B6 - பைரொக்சல் (Pyridoxal), பைரொக்சமின் (Pyridoxamine), விட்டமின் B 12 ( Cyanacubalamines) , Hydrokocobalamin Nicotinic, Acid, Nicotinamine) மற்றும் விட்டமின் C, விட்டமின் D, விட்டமின் E, விட்டமின் H, (Biotin) என்பன அடங்கும். இன்னுமொரு முக்கிய அம்சமாக மினரல்கள் (Mznerals) எனப்படும் கனியுப்புக்கள், இரும்புச்சத்து(Iron), கல்சியம், அயடீன் (Iodine), ஸின்க் (Zinc), செப்பு (Copper), ஃப்ளோரின் (Floorine). மக்னீசியம் (Magnesium) என்பன அடங்கும்.

(தொடரும்)

# அறிவும் வீரமும் அவசியம் கல்வியில்அக்கறை வேண்டும்

— சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன்

வீரமில்லாத அறிவினாலோ, அறிவில்லாத வீரத்தினாலோ பயன் ஏற்படாது. அதன் காரணமாகத் தான் கல்வியில் நாம் அதிக அக்கறை காட்டி வருகிறோம். இவ்வாறு யாழ் மாவட்ட விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடல் வைபவத்தில் விசேட விருந்தினராக கலந்துகொண்டு அவர் மேலும் கூறுகையில், தமிழீழத்தின் பல்துறை சார்ந்த தேவைகளையும் நிறைவு செய்வதற்கு வேண்டிய புத்திஜீவிகளை பாடசாலைகள் படையினருக்கு உதவ உருவாக்க வேண்டும். அறிவு மிக்க, ஆற்றல் மிக்க எதிர்கால சமுதாயம் உருவாக வேண்டும். இதற்காக சகல துறைகளைச் சேர்ந்த அறிஞர்களும் பெரியோர்களும ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இவ் வைபவத்தில் இக் கல்லூரியின் பழைய மாணவர்களான யாழ். மாவட்ட மருத்துவ துறைப் பொறுப்பாளர் ரேகா, தென்மராட்சி இராணுவத் தளபதி பரணி. தென்மராட்சி அரசியல் நிர்வாக பொறுப்பாளர் சந்தண்ணா. உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(மு)

## பாகிஸ்தான் கடற்படைக்கான

# போர்க்கப்பல் குத்தகையை அமெ.நிறுத்திவிட முடிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசு தனது போர்க் கப்பல்களுக்குப் பதிலாகப் புதிய போர்க் கப்பல்களைத் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்காபாகிஸ்தானுக்கு எட்டுப் போர்க் கப்பல்களையும், துணைக் கப்பல்களையும் குத்தகை ஒப்பந்த அடிப்படையில் அளித்திருந்தது. குத்தகை ஒப்பந்தத்தை நீடிக்கப் போவதில்லை என்று இப் விட்டது. மற்ற ஏழு கப்பல்களின் குத்தகைக் காலம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது.

இதேவேளை, பாகிஸ்தான் கடற்படைத்தளபதி அட்மிரல் முகமெட் கான் அமெரிக்கா தமக்களித்த கப்பல்கள் பழையவை. அதற்குப் பதிலாகப் பாகிஸ்தான் சொந்தமாகப் போர்க் கப்பல்களைக் டிக் கொள்ளும் திட்டத்தை அரசு பரிசீலிக்கிறது என்கிறார் அட்மிரல் முகமெட் கான். மேலும் ரஷ்யாவும், பிரிட்டனும் பாகிஸ்தானுக்குப் போர்க் கப்பல்களை விற்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரான்ஸிட

இந்நிலையில், தற்பொழுது மத்தியிலுள்ள இந்திரா காங்கிரஸ் அரசிற்கும், தமிழகத்தில் உள்ள அ. தி. மு. க. அரசாங்கத்திற்கும் இடையில் மோதல்கள் உருவாவதொன்றும் புதுமையான தொன்றல்ல. ஆனால், இம்முறை மத்தியில் ஏற்படும் மோதலானதும். இதனால் தமிழகத்தில் ஏற்படக் கூடிய அரசியல் நெருக்கடியும், தமிழகத்தின் எதிர்கால அரசியலை மதவாத வகுப்புவாத மோதல்களுக்கு இட்டுச் செல்லக் கூடியவையாக அமைந்து விடக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

பிராமண வகுப்பைச் சேர்ந்த செல்வி ஜெயலலிதா திராவிட இயக்கத்தைச் சேர்ந்த ஓர் அரசியற் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றமை ஒரு வரலாற்றுப்பிறழ்வு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவ்வளர்ச்சியினை ஜெயலலிதா "திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி'' எனத் தெரிவித்தார். ஆனால், திராவிட இயக்கத்தின் இப்பரிணாம வளர்ச்சி தமிழகத்தையே ஒரு மத வாத மோதலுக்கு இட்டுச் செல்வதுதான் ஆபத்தான தொன்றாகும்.

ஆரம்பம் முதலே தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா தமக்கு சமயத்தின் பால் இருந்த ஈடுபாட்டை மறைக்க முற்படவில்லை. கோவில்களுடன் தொடர்பை வளர்த்துக் கொண்டார் பிராமண வகுப்பினருடனான உறவையும் வளர்த்துக் கொண்டார். தீவிர வலது சாரியான துக்ளக் ஆசிரியர் சோவுடனான உறவும், பிரபல பத்திரிகையாளர் ராம் போன்றவர்களுடனிருந்த உறவும் அந்த வகையானவையாகவே இருந்தன,

கடந்த காலத்தில் தமிழகத்தில் திராவிட கட்சிகள் ஆட்சியில் இருந்தபோது மத்திய அரசுகள் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு முற்பட்ட போது தனித்து நின்றே எதிர்த்தன அல்லது இடது சாரிகளுடன் சேர்ந்தே எதிர்த்தன. மதவாதிகளுடனோ, தீவிர வலது சாரிகளுடனோ கூட்டுச்சேரவோ சேர்ந்து எதிர்க்கவோ முற்படவில்லைஆனால் ஜெயலலிதா தமது நிலைப்பாட்டை மாற்றி தீவிரமதவாத அமைப்புக்களுடன் சேர்ந்துநின்றுஎதிர்க்கமுற்பட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் இந் நிலைப்பாடானது தமிழகத்தின் எதிர்காலத்தைப் பொறுத்து ஆபத்தான தொன்றாகவே முடியும். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் மதவெறியால் ஏற்படும் கலவரங்களும், இறப்புக்களும் குறைந்த மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. ஆனால் ஜெயலலிதா பதவி ஏற்றபின்னர் மத அடிப்படைவாதிகளின் வளர்ச்சி துளிர்விட்டுள்ளதாக தெரிகின்றது. தமிழகத்தில் தற்பொழுது, பாரதீய ஜனதாக்கட்சியும் சகோதர அமைப்பான இந்து முன்னணியும் தென் மாநிலங்களில் வளர்ச்சி கண்டு வருகின்றன:

இவ்வாறாக மத்தியில் உள்ள காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரானவர்களுடன் கூட்டுச் சேருதல் என்ற ரீதியில் தீவிர மத அடிப்படைவாத கட்சிகளுடன் தமிழக முதலமைச்சர் ஏற்படுத்தி வரும் உறவுகள் தமிழகத்தில் மதவாத வன்முறை நோக்கி ஜெயலலிதா இட்டுச் செல்வதிலேயே முடியும். அதாவது "திராவிட இயக்கங்களின் பரிணாமவளர்ச்சி" தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் ஆரம்பித்து வளர்த்த பகுத்தறிவு பாசறைகளைத் தகர்த்து மதவாத வன்முறை நோக்கி இட்டுச் செ கிறது என்றால் மிகையில்லை என்றே கூறலாம்.

---

## கல்வியில் அக்கறை வேண்டும்

— சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன்

வீரமில்லாதஅறிவினாலோ, அறிவில்லாத வீரத்தினாலோ பயன் ஏற்படாது. அதன் காரணமாகத் தான் கல்வியில் நாம் அதிக அக்கறை காட்டி வருகிறோம். இவ்வாறு யாழ் மாவட்ட விடுதலைப்புலிகளின் சிறப்புத் தளபதி தமிழ்ச் செல்வன் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஒன்று கூடல் வைபவத்தில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு அவர் மேலும் கூறுகையில், தமிழீழத்தின் பல்துறை சார்ந்த தேவைகளையும் நிறைவு செய்வதற்கு வேண்டிய புத்திஜீவிகளை பாடசாலைகள் படையினருக்கு உதவ உருவாக்க வேண்டும். அறிவு மிக்க, ஆற்றல் மிக்க எதிர்கால சமுதாயம் உருவாக வேண்டும். இதற்காக சகல துறைகளைச் சேர்ந்த அறிஞர்களும் பெரியோர்களும ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இவ் வைபவத்தில் இக்கல்லூரியின் பழைய மாணவர்களான யாழ். மாவட்ட மருத்துவ துறைப் பொறுப்பாளர் ரேகா, தென்மராட்சி இராணுவத் தளபதி பரணி. தென்மராட்சி அரசியல் நிர்வாக பொறுப்பாளர் சுந்தரண்ணா. உட்பட பலரும் கலந்து கொண்டனர். (மு)

## றொட்டி, பிஸ்கட் தெற்கில் சேகரிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு உதவுவதற்கென றொட்டி மற்றும் பிஸ்கட் போன்ற உணவு வகைகள் தென்பகுதியில் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

பிரதி சபாநாயகரும், காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான காமினி பொன்சேகா விடுத்தவேண்டுகோளுக்கிணங்க இப் பொருள்கள் சேகரிக்கப்படுவதாகவும் இராணுவத்தினரின் அவசர தேவைகளுக்குப் பயன்படக் கூடிய பொருள்களை வழங்க முன்வருபவர்கள் தொலைபேசியில் தொடர்புகொள்ளும்படியும் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது.

## நத்தாரை முன்னிட்டு தண்டனை குறைப்பு

நத்தார் பண்டிகையை முன்னிட்டு சுமார் எழுநூறு சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர். விசாரணைக் கைதிகளில் சிலரும், பிணைப் பணம் செலுத்தப்படாமையால் சிறையில் இருந்தோரும் இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் அடங்குவர். மரணதண்டனை விதிக்கப்பட்ட சிலருக்கு அத்தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில்

## சிங்களம், தமிழ் கற்பிக்கப்பட வேண்டும்

— அஷ்ரப்

(கொழும்பு)

"பாடசாலை மாணவர்களுக்கு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்''. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார், கல்வித்திட்டத்தில் தேவையான மாற்றத்தைச் செய்து ஜனவரி மாதம் முதல் இரு மொழிகளையும் போதிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதன் மூலம் இரு இனமாணவர்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாவிடின் அவர்களது எதிர்காலம் சிறப்பாக அமையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆதாரம் காட்டி பெறவும்

கடந்த செவ்வாய் மாலை 3-40 மணியளவில் தாவடிச் சந்திக்கும் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்துக்கும் இடையில் பெண்களுக்கானகைக்கடிகாரமொன்றுை தாவடியைச் சேர்ந்த சதாசிவம் வசந்த குமார் என்பவரால் கண்டெடுக்கப்பட்டுஈழநாதம்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

---

## போர்க்கப்பல் குத்தகையை அமெ.நிறுத்திவிட முடிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசு தனது போர்க் கப்பல்களுக்குப் பதிலாகப் புதிய போர்க் கப்பல்களைத் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்காபாகிஸ்தானுக்கு எட்டுப் போர்க் கப்பல்களையும், துணைக் கப்பல்களையும் குத்தகை ஒப்பந்த அடிப்படையில் அளித்திருந்தது.குத்தகை ஒப்பந்தத்தை நீடிக்கப் போவதில்லை என்று இப்போது அமெரிக்கா முடிவு செய்துள்ளது. ஒரு கப்பலின் குத்தகைக் காலம் முடிந்து விட்டது. மற்ற ஏழு கப்பல்களின் குத்தகைக் காலம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது.

இதேவேளை, பாகிஸ்தான் கடற்படைத்தளபதி அட்மிரல் முகமெட் கான் அமெரிக்கா தமக்களித்த கப்பல்கள் பழையவை. அதற்குப் பதிலாகப் பாகிஸ்தான் சொந்தமாகப் போர்க் கப்பல்களைக் கட்டிக் கொள்ள முடியும் என்று கூறியுள்ளார். போர்க் கப்பலைப் பாகிஸ்தான் கட்டிக் கொள்ளும் திட்டத்தை அரசு பரிசிலிக்கிறது என்கிறார் அட்மிரல் முகமெட் கான். மேலும் ரஷ்யாவும், பிரிட்டனும் பாகிஸ்தானுக்குப் போர்க் கப்பல்களை விற்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரான்ஸிடமிருந்து நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொள்வனவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அயோத்தி விவகாரம்

## ஆலயம் மட்டுமல்ல பிரச்சினை வாக்குகளோடும் தொடர்புடையது

- இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவ்

(டில்லி)

அயோத்தி விவகாரம் முழுவதுமே ஆலயத்துடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல.அதுவாக்குச்சீட்டுக்களுடனும் சம்பந்தப்பட்டது. இவ்வாறு இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் காங்கிரஸ்தனது இலக்கை எட்டுவதற்கு தவறானவழியை பின்பற்றாது என்றும், தற்காலிக சரிவு ஏற்படலாம்.தேர்தல் தோல்விகள் கூட ஏற்படலாம்.ஆனால் காலப்போக்கில் நாம்தான் வெற்றிபெறுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர்கள், பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற தலைவர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அயோத்தி விவகாரத்துடன் தொடர்புடைய விடயங்கள் யாவும் உச்சநீதிமன்றத்திடம் விடப்பட வேண்டுமென்றும், அதன் இறுதித்தீர்ப்பிற்கு அனைவருங்கட்டுப்பட வேண்டுமென்றும், இந்திய கம்யூனிஸ்ட், மற்றும் மாக்சிசக் கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளது தெரிந்ததே.

## மா. கம்யூனிஸ்ட்டுகளின் போக்கு கவலையளிப்பதாக உள்ளது

இந்தியப் பிரதமர்

(டில்லி)

பிரதமர் நரசிம்மராவுக்கு மார்க்சிசக் கட்சியின் போக்கு ஏமாற்றம் அளிப்பதாக அமைந்துள்ளது.

பள்ளிவாசல் தகர்க்கப்படும் போது நரசிம்மராவ் அதைத் தடுக்காமல் இருந்ததால் அவரின் அரசு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது. எனவே அவருடைய கட்சி பாரதீய ஜனதாக் கட்சியின் வகுப்பு வாதத்துக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் நாமும் சேர்ந்து கொள்ள முடியாது.

இவ்வாறு மார்ச்சிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

## இஸ்ரேலுக்கு ஐ. நா. சபை காலக்கெடுவிதிக்கவேண்டும்

- அரபு நாடுகள் தீர்மானம்

(கெய்ரோ)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து பாலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டிருப்பது குறித்து அரபு நாடுகள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன.

இந்தப் பாலஸ்தீனியர்கள் திரும்ப அழைக்கப்படுவது குறித்து இஸ்ரேலுக்கு காலக்கெடு விதித்து ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமெனவும், இது விடயத்தில் அரபு நாடுகள் பொது நிலையொன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும், இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# இனப்பிரச்சினைக்கு தீர்வு ஜேர்மன் பா.உ. வற்புறுத்து

[கொழும்பு]

சிறிலங்கா அதன் சுயேச்சைப் பொருளாதாரக் கொள்கையினால் உண்மையான நன்மைகளைப் பெற வேண்டுமானால் நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்று கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜேர்மனியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆளும் கட்சியான கிறிஸ்ரியன் டெமோக்கிறட்டிஸ்யூனியனைச் சேர்ந்த டாக்டர் ரூடல்வ் ஸ்பிரங் மற்றும் பீற்றர் இற்றல்மானும் நாடு திரும்பு முன் கொழும்பில் நடத்திய நிருபர்கள் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தனர்.

வளரும் நாடுகளுக்கு வழங்கப்படும் அந்நிய உதவியை மனித உரிமைகளுடன் சம்பந்தப்படுத்தும் கொள்கை சரிதானா என்ற செய்தியாளர் கேள்விக்கு பதிலளித்த பீற்றர் இற்றல்மான் மனித உரிமைகள் ஜனநாயகத்தில் ஓர் அங்கம் உதவியைப் பெறும் நாடுகளில் ஜனநாயகம் பேணப்பட வேண்டும் என்பதை ஜேர்மனியப் பாராளுமன்றம் விரும்புகிறது என்றார்.

நாட்டின் மனித உரிமைகள் நிலைமை பற்றிக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், உள்நாட்டு அரசியல் பற்றி நாம் பேசக் கூடாது, எம்மை விட உங்கள் நாட்டைப் பற்றி உங்களுக்குத்தான் தெரியும் என்றனர்.

## தெரிவுக்குழு மீதான நம்பிக்கை போய் விட்டது

### சுதந்திரக் கட்சி எம். பி

(கொழும்பு)

வடக்கு. கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணவென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அர்த்தமுடைய தீர்வொன்றைக் காணும் என்ற நம்பிக்கையைத் தான் இழந்து விட்டதாக சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ரி. டபிள்யூ. இராசரத்தினம் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், திரு. மங்கள முனசிங்க, சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்திய மாதிரி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது எனினும் அதிலுள்ள குறைபாடான அம்சங்கள் பற்றி கவனம் செலுத்தவில்லை. மேலும் பல தடைகளை நாம் தாண்ட வேண்டியிருக்கிறது என்பது புலனாகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## பார்சல்கள் தவறிவிட்டன

வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் 09-12-92 அன்று 3 லொறிகளில் பகுதிபகுதியாக ஏற்றப்பட்ட பார்சல்களுள் ஒருபெட்டியிலும் ஒரு உரட்பையிலும் கட்டப்பட்ட புடைவை வகை தவறிவிட்டன இப்பார்சல்கள் குறிப்பிட்ட மூன்று லொறிகளுள் ஏதாவதொன்றில் இருக்கக் கண்டால் தயவு செய்து "அங்கலின்" 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத்தரவும்.

(3862)

## அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் ரஞ்சித் விளை...

## நினைவஞ்சலிக் கூட்டம்

[வடமராட்சி]

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பிரதேசப்பகுதியில் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 26 ஆம் திகதி நாகர் கோவிலில் வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. மதன் தலைமையில் இரவு 7 30 மணிக்கு நடைபெறும். இதில் விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் உரை நிகழ்த்துவர். அடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [யோ]

## வீதியில் சென்ற பெண் வலிப்பினால் மரணம்

[யாழ்ப்பாணம்]

வீதியில் சென்ற பெண்மணி ஒருவர் திடீரென ஏற்பட்ட வலி காரணமாக வீதியில் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் ஆரிய குளம் சந்திக்கு அண்மையில் நிகழ்ந்தது. சுமார் 50 வயதுமதிக்கத்தக்க இப்பெண்மணி மஞ்சள் புள்ளிச் சேலை அணிந்துள்ளதுடன் ஆபரணங்களும் அணிந்திருந்தார்.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரை அடையாளம் காண உதவுமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் பொதுமக்களைக் கேட்டுள்ளன.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்: 22 — 10 — 1966



வீரமரணம்: 25 — 11 — 1992

### கப்டன் சுது [சேகரன்]

(ராஜப்பு அன்ரனி ராஜசேகர்)

மூதூர், திருமலை.

வங்கக் கடலின் ஓரத்தில் நல்ல சங்கத்
தமிழதன் திரமுடன்
பொங்கும் மா கடல் தாளமதும் உன்னைக்
கொண்டுவந்த மாவலியும்
எங்கும் நாமென முழங்கிடுவோம்
உன்னைக் கொண்டுவந்த மூதூரை.

ஆண்டுகள் தான் இருபத்தேழான வேளதனில்
நீ ஆங்குதியானாயே என் ஆதவனே
பேதினியில் தீயவரை அழித்திடவே
நீ செருக்களம் புகுந்தாயே என் சேகரனே.

கடசெவியும் களிகளும் வாழுகின்ற கானகத்தை
தேடியதில் இல்லையபபா தறபோதும்
எப்பொழுதும் தேடுகின்றேன் இப்போதும்
தப்பேதும நினையாமல் தருவாயா
உன் நினைவை எப்போதும்.

## காங்கிரசுடன் உறவை நீடிப்பதா? கருத்துத் தெரிவிக்குமாறு ஜெயலலிதா கோரிக்கை

[சென்னை]

இந்திரா காங்கிரசுடன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் நீடித்திருக்க வேண்டுமா என்பது பற்றியும் தமிழக அரசு மத்திய அரசுடன் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் பற்றியும் மனம் திறந்து கருத்துத் தெரிவிக்குமாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அ. தி. மு. க. உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலேயே தமிழக அரசின் முடிவுகள் பரிசீலிக்கப்படும் என்றார்.

தமிழக அரசிற்கும் மத்திய அரசிற்கும் இடையிலான உறவு நிலை அண்மைக்காலமாக பாதிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. அங்கு தமிழக அரசு கலைக்கப்படும் என்ற செய்தியும் பரவலாக அடிபடுகிறது.

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியின் முன்னைநாள் அதிபரான அமரர் பொ. ச குமாரசுவாமி அவர்களின் நினைவுப்பேருரை நிகழ்ச்சி இன்று காலை 9 30 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

'ஆளுமையும் ஆசிரிய, மருத்துவத்தொழில்களும்' என்னும் தலைப்பில் மதுரைப்பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். இந்நிகழ்ச்சியை அகில இலங்கைக் கம்பன் கழகம் ஏற்பாடு செய்துள்ளது

## மணலாற்றில்

யேற்றங்களில் அமைந்துள்ள இராணுவமுகாம்களிலிருந்தும் பரவலான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இத்தாக்குதல் நடவடிக்கையின் போது இரண்டு இராணுவ அணிகள் முற்றாக அழிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதலின் போது ஆறு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## மண்ணெய்

மண்எண்ணை லொறிகள் பல ஈரற்பெரியகுளம் வாகன சோதனை முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவை அனைத்தும் இன்னும்...

## மரணச் சடங்கின் போது மரணமானவர் சைக்கிள் திருட்டு

[மானிப்பாய்]

மரணச்சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மரணமானவரின் சைக்கிளை திருடன் ஒருவர் திருடிச்சென்ற சம்பவம் ஒன்று நவாலிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படிச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; கடந்த 23 ஆம் திகதி நவாலியைச் சேர்ந்த மகேந்திரம் என்பவரின் மகள் காந்தரூபி [வயது 16] மரணமானார். இவரது மரணச்சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இவர் பயன்படுத்திய சைக்கிளை யாரோ திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை நவாலிப் பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் திருட்டுகள் அதிகரித்திருப்பதாகவும் மோட்டார் சைக்கிளும் இரு சைக்கிள்களும் திருடுப் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [7]

## அங்கிளிக்கன்

வும் மற்றும் முக்கியஸ்தர்களையும் சந்தித்து யாழ்ப்பாண நிலைவரம் குறித்து ஆலோசனை கலப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வருடம டிசம்பர்மாதம் 6ஆம் திகதி இலங்கைத் திருச்சபை கொழும்பு மறை மாவட்டத்தில் ஆயராக இவர் அங்கிளிக்கன் திருச்சபையின் ஆத்மீகத் தலைவராக விளங்கும் கன்ரபரி அதிமேற்றாணியார் அதி வண. டாக்டர் ஜோர்ஜ் கேரி அவர்களால் திருநிலை படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 88 பனை

வாக அதிகாரிகள், 37 சுங்க அதிகாரிகள், 78 உள்ளூராட்சி அதிகாரிகள், 14 வங்கி அதிகாரிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் 13 பேரும் இலஞ்சத் திணைக்களத்தினால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

1991 ஜனவரியிலிருந்து இன்றுவரை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட கூட்டுத்தாபனம் அரசாங்கத்திணைக்களங்களை...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில்.

### சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்

தொடர்ப் பொது விரிவுரைகள் (தமிழ்)

நோக்கம்:- சைவசித்தாந்தம் பற்றிய புரிதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

இலக்குக்குழுமம்:- சைவசித்தாந்தம் பற்றி அறிய ஆர்வமுள்ள பொதுமக்களும் மாணவர்களும்

காலம்:- 02 01.1993 முதல் 06 03 1993 வரை பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் 12 மணி வரை (மொத்தம் 10 வாரங்கள், 20 விரிவுரைகள்)

இடம்:- கைலாசபதி கலையரங்கு. யாழ் பல்கலைக்...

## பார்சல்கள் தவறிவிட்டன

வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் 09-12-92 அன்று 3 லொறிகளில் பகுதிபகுதியாக ஏற்றப்பட்ட பார்சல்களுள்ஒருபெட்டியிலும் ஒரு உரப்பையிலும் கட்டப்பட்ட புடைவை வகை தவறிவிட்டன இப்பார்சல்கள் குறிப்பிட்ட மூன்று லொறிகளுள் ஏதாவதொன்றில் இருக்கக் கண்டால் தயவு செய்து "அங்கலின்" 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத்தரவும்.

(3862)



## அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் ரஞ்சித் விளையாட்டுக் கழக அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு.

1-ம் பரிசு - 1036
2-ம் பரிசு - 813
3-ம் பரிசு - 1478

ஆறுதல் பரிசில்கள்: 975, 1060
1327, 535, 1724

உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

(3864) நிர்வாகம்



எமது உன்னத தயாரிப்பு

## "உருத்திரா ஜாம்"

- URUTHIRA JAM -

URUTHIRA Jam

இரசாயனக் கலவைகளோ
வேறுவிதமான சேர்க்கைகளோ
அற்ற முறையில் பதப்படுத்தப்பட்ட சுத்தமான
திராட்சைத் திரள் பாணி
பாவனையாளர்களின் அமோக ஆதரவின்
மத்தியில் தற்போது
எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது
வயோதிபர் முதல் சிறுவர்களுக்கும்
ஊட்டச்சத்து வழங்கும்
முழுமையான உணவு இது

- உணவுகளுடன் சுவை சேர்க்கவோ
அல்லது
- தனியாகவோ

விருப்புடன் உட்கொள்ள உகந்தது.

உற்பத்தியாளர்:

"உருத்திரா"

பலாலி வீதி, ஊரெழு. (3860)


## கப்டன் சுது [சேகரன்]
## (ராஜப்பு அன்ரனி ராஜசேகர்)

மூதூர், திருமலை.

வங்கக் கடலின் ஓரத்தில் நல்ல சங்கத்
தமிழதன் திரமுடன்
பொங்கும் மா கடல் தாளமதும் உன்னைக்
கொண்டுவந்த மாவலியும்
எங்கும் நாமென முழங்கிடுவோம்
உன்னைக் கொண்டுவந்த மூதூரை.

ஆண்டுகள்தான் இருபத்தேழான வேளைதனில்
நீ ஆங்குதீயானாயே என் ஆதவனே
பேதினியில் தீயவரை அழித்திடவே
நீ செருக்களம் புகுந்தாயே என் சேகரனே.

கடசெவியும் எளிசுகளும் வாழுகின்ற கானகத்தை
தேடியதில் இல்லையபபா தறபோதும்
எப்பொழுதும் தேடுகின்றேன் இப்போதும்
தப்பேதும நினையாமல் தருவாயா
உன்நினைவை எப்போதும்.

(சி-5658)

எப்போதும் உன் நினைவில் வாடும்
பெரியம்மா குடும்பத்தினர்

# மணலாற்றில் வீரச்சாவு



மேஜர் செங்கோலன்
(செங்கோல்)



கப்டன் கல்கி



கப்டன் சுரேந்திரன்



லெப். அமுதன்



லெப். மருதன்
(வித்திரா)



லெப். இளங்கோ

மணலாற்றில்

யேற்றங்களில் அமைந்துள்ள இராணுவமுகாம்களிலிருந்தும் பரவலான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இத்தாக்குதல் நடவடிக்கையின் போது இரண்டு இராணுவ அணிகள் முற்றாக அழிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதலின் போது ஆறு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

### மண்ணெய்

மண்எண்ணை லொறிகள் பல ஈரற்பெரியகுளம் வாகன சோதனை முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவை அனைத்தும் இன்னும் சில தினங்களில் வடபகுதி நோக்கி வரலாம் என்றும் கூறப்பட்டது. (தி)

சபை கொழும்பு மறை மாவட்டத்தில் ஆயராக இவர் அங்கிளிக்கன் திருச்சபையின் ஆத்மீகத் தலைவராக விளங்கும் கன்ரபரி அதிமேற்றாணியார் அதி வண. டாக்டர் ஜோர்ஜ் கேரி அவர்களால் திருநிலை படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 88 பலை

வாக அதிகாரிகள், 37 சுங்க அதிகாரிகள், 78 உள்ளூராட்சி அதிகாரிகள், 14 வங்கி அதிகாரிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் 13 பேரும் இலஞ்சத் திணைக்களத்தினால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

1991 ஜனவரியிலிருந்து இன்றுவரை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்கள்உள்ளிட்ட கூட்டுத்தாபனம் அரசாங்கத்திணைக்களங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக 637 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக இலஞ்சத்திணைக்களவட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அநேகமான முறைப்பாடுகள் உணவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு எதிராக கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது 89 முறைப்பாடுகள் உணவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு எதிராக இலஞ்சத் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளன. ஏனைய சிலமுறைப்பாட்டு விபரங்கள் வருமாறு; உள்ளூராட்சி அதிகாரிகள்-78, பொலிஸ்-72, நிர்வாக உத்தியோகத்தர்கள்-45, சுங்கம்37.

### கிறிஸ்மஸ்

குமார் [54] அ. கனமதிலி (32), கே. சுஜதா [15] சுஜேந்திரன் [14] செபஸ்தியன், சுதர்சனி (14. சுகிர்தா (6), சபினா (6 மாதம்), அன்டன் லீலா (10), எஸ். முத்துராஜா (50), இராஜேந்திரம் (14), சமீமா (12) து. புஸ்பம் [32] சுபத்திரா ஆகியோர் காயம் அடைந்தனர். (பா, நி)


### தொடர்ப் பொது விரிவுரைகள் (தமிழ்)

நோக்கம்:- சைவசித்தாந்தம் பற்றிய புரிதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

இலக்குக்குழுமம்:- சைவ சித்தாந்தம் பற்றி அறிய ஆர்வமுள்ள பொதுமக்களும் மாணவர்களும்

காலம்:- 02 01.1993 முதல் 06 03 1993 வரை பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் 12 மணி வரை (மொத்தம் 10 வாரங்கள், 20 விரிவுரைகள்)

இடம்:- கைலாசபதி கலையரங்கு, யாழ் பல்கலைக் கழகம்.

பல்கலைக்கழக ஆய்வாளர்களினதும் ஏனைய சைவசித்தாந்த அறிஞர்களினதும் 20 விரிவுரைகள் இடம் பெறவுள்ளன ஆர்வமுள்ளோர், பங்குபற்றுநர்களாகவும், பார்வையாளர்களாகவும் கலந்து கொள்ளலாம். பங்குபற்றுநர்களே கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளலாம் பங்குபற்றுநர்களாகக் கலந்து கொள்ள விரும்புவோர் 1992 டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தொடர்பு முகவரி:-
இணைப்பாளர்,
புறநிலைப்படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்,

(சி/5645)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**25.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7227
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;
இல்லை
வட பகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

42-9345, 26-3582, 26-5846, 41-1799, 41-1092,
40-2394, 22-6832, 41-9167, 42-2397, 24-5418,
40-8448, 26-4433, 26-8430, 27-6821, 24-8631,
28-1636, 24-6972, 28-8367, 27-8364, 27-4070,
26-6309, 26-6062, 27-5822, 27-7081.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது